# தேசிய வருமானமும் செலவும்

**பொதுவான போக்குகள்**

1992 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ.) 1982 இன் நிலையான விலைகளில் 4.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சி 1991 இல் பதிவு செய்யப்பட்ட 4.6 சத வீதம் கொண்ட வீதத்தைவிடக் குறைவாக இருந்தபோதிலும் உலகளாவிய மந்த நிலை மற்றும் பொருளாதாரத்தின் முதன்மைத்துறைமீது கடுமையான பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்த மிகவும் சாதகமற்ற காலநிலை நிலை மைகள் என்பனவற்றின் மத்தியில் அது அடையப்பட்டமையால் பாராட்டற் குரியதாகும். மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளிலான மாற்ற மானது வேளாண்மை, சுரங்கத்தொழிலும் கல்லுடைத்தலும் என்பவற்றை உள் ளடக்கிய முதன்மைத்துறையின் சார்புரீதியான முக்கியத்துவம் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டு, மிகவும் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரத்திற்கு இட்டுச் சென்றதையும் காண முடிந்தது. இதனால் முதன்மைத்துறையின் வீழ்ச்சிக்கு மத்தியிலும் பொருளாதாரம் சார்புரீதியில் உயர்ந்த வீத வளர்ச்சியைப் பேணக் கூடியதாகவிருந்தது. 1992 இன் மொத்தத் தேசிய உற்பத்தி (மொ.தே.உ.) 1991 இல் பதிவு செய்யப்பட்ட 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குத் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் ஒரு உந்து சக்தியாக விளங்கியமையைப் பொருளாதாரத் தின் துறைரீதியான பகுப்பாய்வு வெளிக்காட்டியது. பொதுவான தயாரிப்புத் துறையின் வளர்ச்சி 1991 இன் 6.8 சதவீதத்திலிருந்து 1992 இல் 9 சதவீத விரிவாக்கத்தைப் பதிவுசெய்து தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி யானது தொழிற்சாலைக் கைத்தொழிலின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட 13 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான அதிகரிப்பின் விளைவாக ஏற்பட்ட தாகும். தயாரிப்புத்துறையின் மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதியில் நாலில் மூன்று பங்கிற்கும் கூடுதலான அளவிற்கு வகைகூறிய தொழிற்சாலைக் கைத் தொழிலானது ஆடை மற்றும் ஏனைய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களைப் பெருமளவில் கொண்டிருந்ததுடன் 1992 இல் இலங்கைக் கைத்தொழில் ஏற்று மதிகளில் ஏற்பட்ட 37 சதவீத அதிகரிப்பில் இவ்விரிவாக்கம் பிரதிபலிக்கப் பட்டது.

அதிகரித்த பொருளாதார நடவடிக்கையும் உறுதிப்பாடும் கட்டடவாக்கத் தில் செழிப்பான வளர்ச்சியை ஏற்படுத்தின. 1992 இல் கட்டடவாக்கத்துறை 7 சதவீதங் கொண்ட உண்மை வளர்ச்சியைக் கண்டதுடன் இது 1991 இல் அடையப்பட்ட 3.1 சதவீதமான வீதத்தைவிட இரு மடங்கிற்கும் மேலான தாகும். கட்டடவாக்கம் நீங்கலான பணிகள்துறை 1991 இன் 6.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 5.3 சதவீதத்தால் விரிவடைந்தது. இத்துறையினுள், வங்கித்தொழிலும் ஏனைய நிதிப்பணிகளும் வர்த்தகம், போக்கு வரத்து மற்றும் தொடர்பூட்டல்கள் சார்புரீதியில் உயர்ந்த வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருந்தன.

1992 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சிறிதளவு மிதமாக இருந்தமைக்குப் பாதகமான காலநிலை நிலைமைகளும் உலகளாவிய மந்த நிலையும் முக்கிய காரணங்களாகும். 1991 திசெம்பரிலிருந்து 1992 ஏப்பிறல் வரை நிலவிய கடும் வரட்சி வேளாண்மைத் துணைத்துறை 1991 இன் 0.8 சதவீத வளர்ச்சிக்கு முரணாக 1992 இல் 2.3 சதவீதத்தால் சுருக்கமடையக் காரண மாயிற்று. எனினும் 1992 இல் மீன்பிடித்துணைத்துறையில் ஏற்பட்ட 4.1 சதவீத வளர்ச்சி வேளாண்மை, காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித்துறையில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியை 1.5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தும் அளவிற்கு 1991 இல் இத்துறை 1.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வேளாண்மை உற்பத்தி களின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, இத்துறைமீது ஓர் நேரடித் தாக்கத்தைக் கொண்டிருந்தது மட்டுமன்றி ஏற்றுமதிப் பொருட்கள், போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தகம் போன்ற இணைந்த துறைகளினது வளர்ச்சியையும் குறைவடையச் செய்தது. தொடரும் உலகளாவிய மந்தநிலை, இரத்தினக்கற்கள் மற்றும் ஏனைய கனிப்பொருட்களின் ஏற்றுமதிகளில் மேலும் ஓர் குறைப்பினை ஏற்படுத்திச் சுரங்கமறுத்தல் துணைத்துறையில் ஓர் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை விளைவித்தது. கட்டடவாக்கத்திலான அதிகரித்த நடவடிக்கைகளின் தாக்கம் அகழ்வு நடவடிக்கையில் கூட்டிய பெறுமதிக்கு இட்டுச் சென்றது. இது அகழ்வுத் தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பாதகமான எதிர்விளைவுகளை ஒழிப்பதற்கு ஓரளவிற்கு உதவியது. இதன் விளைவாக பொதுவான அகழ்வு, கல்லுடைத்தல் துறை 6 சதவீதமான வீழ்ச்சியை மட்டும் பதிவு செய்தது.

1992 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளின் மொத்தத் தேசிய உற்பத்தியானது (மொ.தே.உ.) ரூ. 377 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது 1991 இல் மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூ. 328 பில்லியனை விட 14.8 சதவீதம் அதிகமானதாகும்.

நிலையான (1982) பெறுமதிகளில் மொ.தே.உ. 1991 இன் ரூ. 132 பில்லியன்களிலிருந்து 1992 இல் ரூ. 138 பில்லியன்களுக்கு அதிகரித்து 4.4 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. பொருளாதாரத்தில் பொதுவான விலை மாற்றங்களைச் சுட்டிக்காட்டும் மொத்தத் தேசிய உற்பத்தியின் உள்ளடக்கச் சுருக்கி 1991 இற்காக மதிப்பிடப்பட்ட 10.5 சதவீதப் பெறுமதியைவிடச் சற்றுக் குறைவாக 1992 இல் 10.0 சதவீதமாக மதிப்பிடப்பட்டது.

1992 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 174.1 இலட்சமென மதிப்பிடப்பட்டது. இதன்படி 1992 இல் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 21,641 (ஐ.அ. டொலர்கள் 494) என மதிப் பிடப்பட்டதுடன் இது சென்ற ஆண்டின் மதிப்பிடப்பட்ட தொகையான ரூ 19,017 (ஐ. அ. டொலர்கள் 460) இனை விட 13.8 சதவீதம் அதிகமான தாகும். 1992 இல் உண்மை நியதிகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி யின் அதிகரிப்பு 3.5 சதவீதமாகும்.

பன்னாட்டு வர்த்தகத்தின் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தின் நோக்கில், வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்படும் எந்த மாற்றமும் இலங்கையின் பொரு ளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்டிருக்கும். இதன்படி, நாட்டின் உண்மை மொ.தே.உ. இன் கொள்வனவுச் சக்தியாக மதிப்பிடப்படும் உண்மைத் தேசிய வருமானம் கூட்டப்பட்ட முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. 1992 இல் வர்த்தக மாற்று வீதம் 3.7 சதவீதத்தால் முன்னேறியது. இதனால் வர்த்தக மாற்று வீதத்திலான மாற்றல்களின் தாக்கத்திற்காகச் சீராக்கம் செய்யப்

பட்ட உண்மை மொ.தே.உ. ஆன உண்மைத் தேசிய வருமானம் 5.3 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இது 1991 இல் காணப்பட்ட 3.7 சதவீத வளர்ச்சியை விட முன்னேற்றமடைந்து காணப்பட்டது.

செலவுப் பக்கத்தில், நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 459 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 1991 இனைவிட 11.9 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. 1992 இல் பெயரளவு நியதிகளில் நுகர்வுச் செலவு 10.3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1991 இன் ரூ. 85 பில்லியனிலிருந்து 1992 இல் ரூ. 101 பில்லியனுக்கு 18.0 சதவீதத்தால் அதிகரித்தது. 1992 நடைமுறை நியதிகளில் நுகர்வுச் செலவு தனியார்துறை, அரசதுறை ஆகிய இரண்டிலும் 1991 ஐவிடக் குறைந்த அளவிலேயே வளர்ச்சியடைந்தது.

உண்மை நியதிகளில், 1992 இல் மொத்த நுகர்வுச் செலவு 1991 இன் 6.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீதத்தால் அதிகரித்தது.

1992 இல் நடைமுறை நியதிகளில் மொ.உ.உ. இற்கான முதலீட்டு விகிதம் 23.7 சதவீதமாக விளங்கியதுடன் இது 1991 இல் பதிவு செய்யப்பட்ட 22.9 சதவீதத்தைவிட முன்னேற்றமடைந்து காணப்பட்டது. உண்மை நியதிகளில் முதலீடு 1991 இல் பதிவு செய்யப்பட்ட 7.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதத்தால் அதிகரித்தது. முதலீட்டின் பெரும் பகுதி தொடர்ந்தும் தனியார்துறையிலிருந்து உருவாக்கப்பட்டதுடன் கட்டடவாக்கம், போக்குவரத்துக் கருவி மற்றும் ஏனைய முதலீட்டுப் பொருட்களில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளார்ந்த அமைப்புக்களில் அரச முதலீடு 1991 ஐ விடக் குறைந்த வேகத்தில் தொடர்ந்தது.

1992 இல் நடைமுறை நியதிகளில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 65 பில்லியன்சளாக மதிப்பிடப்பட்டது. 1992 இல் உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதம் அதாவது சந்தை விலைகளில் மொ.உ.உ. இற்கான உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதம் 1991 இன் 12.7 சதவீதத்திலிருந்து 1992 இல் 15.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளை தேசிய சேமிப்புக்கள் விகிதம் 1991 இன் 15.2 சதவீதத்திலிருந்து 1992 இல் 18.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. சேமிப்புக்களில் ஏற்பட்ட இவ் அதிகரிப்பு அதிகரித்த தனியார் சேமிப்புக்கள், அரசின் சேமிப்பின்மையில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகிய இரண்டாலும் உருவாக்கப்பட்டது.

**துறைவாரியான செயலாற்றம்**

மொ.தே. உற்பத்தியின் துறைவாரியான செயலாற்றம் அட்டவணை 16 இல் தரப்பட்டுள்ளது. 1991 இனைப் போன்று பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்த துறைகளாகத் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகள் விளங்குகையில் வேளாண்மை மற்றும் அகழ்வுத்துறைகள் எதிர்மாறான வளர்ச்சியைப் பதிவு செய்தன.

பொதுவாக வேளாண்மை, காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித்துறை 1992 இல் 1.5 சதவீதம் கொண்ட சுருக்கத்தைப் பதிவு செய்தது. மொ.தே.உ. இல் வேளாண்மை பெரும்பங்கினைக் கொண்டிருப்பதனையும் மற்றும் வேளாண்மைக்கும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில், போக்குவரத்து மற்றும் வர்த்தகம் போன்ற ஏனைய துறைகளுக்கிடையேயான பிணைப்புக்களை

## அட்டவணை 1.6

### நிலையான விலைகளில் (1982) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1990 – 1992

| வகை | கூட்டப்பட்ட பெறுமதி (ப. ரூ. இ.) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப. இ. ரூ.) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990* | 1991* | 1992* | 1990* | 1991* | 1992* | 1991* | 1992* | 1991* | 1992* |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 30,011 | 30,570 | 30,112 | 23.7 | 23.1 | 21.8 | 559 | - 458 | 9.7 | - 7.8 |
| 1.1 வேளாண்மை ... | 25,729 | 25,941 | 25,338 | 20.4 | 19.6 | 18.3 | 212 | - 603 | 3.7 | - 10.2 |
| 1.1.1 தேயிலை ... | 3,004 | 3,100 | 2,303 | 2.4 | 2.3 | 1.7 | 96 | - 797 | 1.7 | - 13.5 |
| 1.1.2 இறப்பர் ... | 718 | 655 | 662 | 0.6 | 0.5 | 0.5 | - 63 | 7 | - 1.1 | 0.1 |
| 1.1.3 தெங்கு ... | 3,261 | 2,827 | 3,081 | 2.6 | 2.1 | 2.2 | - 434 | 254 | - 7.5 | 4.3 |
| 1.1.4 நெல் ... | 6,378 | 6,002 | 5,882 | 5.0 | 4.5 | 4.3 | - 376 | - 120 | - 6.5 | - 2.0 |
| 1.1.5 ஏனையவை ... | 12,368 | 13,357 | 13,410 | 9.8 | 10.1 | 9.7 | 989 | 53 | 17.1 | 0.9 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 2,030 | 2,107 | 2,149 | 1.6 | 1.6 | 1.6 | 77 | 42 | 1.3 | 0.7 |
| 1.3 கடற்றொழில் ... | 2,252 | 2,522 | 2,625 | 1.8 | 1.9 | 1.9 | 270 | 103 | 4.7 | 1.8 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 3,901 | 3,511 | 3,300 | 3.1 | 2.7 | 2.4 | - 390 | - 211 | - 6.7 | - 3.6 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 22,427 | 23,949 | 26,106 | 17.7 | 18.1 | 18.9 | 1,522 | 2,157 | 26.3 | 36.7 |
| 3.1 ஏற்றுமதிக்கான பதனிடல் ... | 3,530 | 3,332 | 2,959 | 2.8 | 2.5 | 2.1 | - 198 | - 373 | - 3.4 | - 6.3 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் ... | 17,085 | 18,708 | 21.140 | 13.5 | 14.1 | 15.3 | 1,623 | 2,432 | 28.0 | 41.3 |
| 3.3 சிறு கைத்தொழில் ... | 968 | 1,065 | 1,150 | 0.8 | 0.8 | 0.8 | 97 | 85 | 1.7 | 1.4 |
| 3-4 ஏனையவை ... | 844 | 844 | 857 | 0.7 | 0.6 | 0.6 | — | 13 | — | 0.2 |
| 4. கட்டடவாக்கம் ... | 8,761 | 9,033 | 9,665 | 6.9 | 6.8 | 7.0 | 272 | 632 | 4.7 | 10.7 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,681 | 1,800 | 1,897 | 1.3 | 1.4 | 1.4 | 119 | 97 | 2.1 | 1.6 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 14,410 | 15,534 | 16,466 | 11.4 | 11.7 | 11.9 | 1,124 | 932 | 19.4 | 15.8 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 26,497 | 28,556 | 30,215 | 21.0 | 21.6 | 21.9 | 2,059 | 1,659 | 35.6 | 28.2 |
| 7.1 இறக்குமதி ... | 9,422 | 10,826 | 11,974 | 7.5 | 8.2 | 8.7 | 1,404 | 1,148 | 24.3 | 19.5 |
| 7.2 ஏற்றுமதி ... | 3,060 | 3,210 | 3,576 | 2.4 | 2.4 | 2.6 | 150 | 366 | 2.6 | 6.2 |
| 7.3 உள்நாடு ... | 14,015 | 14,520 | 14,665 | 11.1 | 11.0 | 10.6 | 505 | 145 | 8.7 | 2.5 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 6,556 | 6,831 | 7,241 | 5.2 | 5.2 | 5.2 | 275 | 410 | 4.8 | 7.0 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,705 | 3,761 | 3,795 | 2.9 | 2.8 | 2.7 | 56 | 34 | 1.0 | 0.6 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 6,355 | 6,304 | 6,449 | 5.0 | 4.8 | 4.7 | - 51 | 145 | - 0.9 | 2.5 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 4,940 | 5,355 | 5,714 | 3.9 | 4.1 | 4.1 | 415 | 359 | 7.2 | 6.1 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 129,244 | 135,204 | 140,960 | 102.2 | 102.3 | 102.1 | 5,960 | 5,756 | 103.0 | 97.8 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | (2,818) | (2,990) | (2,863) | - 2.2 | - 2.3 | - 2.1 | - 72 | 127 | - 3.0 | 2.2 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 126,426 | 132,214 | 138,097 | 100.0 | 100.0 | 100.0 | 5,788 | 5,883 | 100.0 | 100.0 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: 1992 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் கிடைக்கத்தக்க சுங்கத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

யும் கருத்திற் கொள்கையில் இவ்வீழ்ச்சியானது 1991ஐவிட 1992இல் மொ.தே.உ. இன் குறைந்த வளர்ச்சிக்கான பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. நீடித்த வரட்சியின் தாக்கமானது பெருந்தோட்ட வேளாண்மை, நெல், கரும்பு மற்றும் துணை உணவுப் பயிர்களில் தெளிவாகக் காணப்பட்டது. நீண்ட வரட்சி மற்றும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட அளவுக்கதிகமான மழை என்பவற்றின் தாக்கங்கள் தேயிலைத் தோட்டங்களில் கூடுதலாகக் காணப்பட்டதுடன் இது கால் நூற்றாண் டிற்கும் மேலான தேயிலை உற்பத்தியில் ஆகக் குறைந்த மட்டத்தையும் ஏற்படுத்தி யது. தெங்கு 9 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தபோதிலும் தேயிலைத் துணை துறையிலான கூட்டப்பட்ட பெறுமதி 25.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து பெருந்தோட்டத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் 8.1 சதவீத வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. தாமதித்த மழை ஒரு குறைந்த சிறுபோகப் பருவகாலத்திற்கு இட்டுச் சென்றதுடன் சிறுபோக நெல் உற்பத்தி 1992 இல் 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதனால் பெரும்போக அறுவடை சாதகமாக விளங்கி உற் பத்தியில் 5 சதவீத அதிகரிப்பைக் காட்டியபோதிலும் 1992 இல் மொத்த நெல் உற்பத்தி 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முக்கியமாகத் துணை உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பழங்கள், காய்கறிகள், கால்நடை, புகையிலை மற்றும் கரும்பு போன்ற பயிர்களை உள்ளடக்கிய ‘ஏனைய’ வேளாண்மைத் துணைத்துறை ஒரு சிறிய வளர்ச்சியைக் கொண்டிருந்தது. துணை உணவுப் பயிர்கள் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஆகிய இரண்டிலும் கூட்டப்பட்ட பெறுமதி வீழ்ச்சியடைந்தபோதிலும் பழங்கள், காய்கறிகள் மற்றும் ஏனைய பண்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் இதை எதிரீடு செய்யக்கூடியதாக இருந்ததுடன் துணைத் துறையில் ஒரு சிறு வளர்ச்சியைப் பதிவு செய்தது.

1992 இல் கடற்றொழில் துணைத்துறை 1991 இன் 12 சதவீத வளர்ச்சி யுடன் ஒப்பிடுகையில் 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கரையோரப் பிரதேசங்களில் காணப்பட்ட மிகப் பெரும் உறுதிப்பாட்டினால் இத்துணைத் துறையில் ஏற்பட்ட தொடர்ச்சியான மேம்பாட்டை எடுத்துக்காட்டுவதனால் 1992 இன் வளர்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்தது.

அகழ்தலும் கல்லுடைத்தலும் தொடர்ந்தும் எதிர்க்கணிய வளர்ச்சியைக் கொண்டிருந்ததுடன் 1991 இன் சுருக்கமான 10 சதவீதத்தைத் தொடர்ந்து 1992 இல் 6 சதவீத சுருக்கத்தை அடைந்தது. உன்னத வளர்ச்சியைப் பெற்று வரும் கட்டடவாக்கக் கைத்தொழில் கல்லுடைத்தல் துணைத்துறையில் பெறு மதிக் கூட்டலை அதிகரித்தமையால் அகழ்வுத்தொழில் துணைத்துறையில் கனிப் பொருள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தினைத் தணித்தது.

தயாரிப்புத்துறை தொடர்ந்தும் பொருளாதார வளர்ச்சிக்குப் பலமான தூண்டுதலை வழங்கியது. நிலையான நியதிகளில் மொ.தே.உ. இல் ஏற்பட்ட அதிகரிப்பில் மூன்றில் ஒன்றிற்கும் கூடுதலான பங்கு இத்துறையிலிருந்து கிடைத் தது. பொதுவாகப் பார்க்கையில் இத்துறை கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதி யில் 9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. 1991 இன் 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைத் தொடர்ந்து இது ஏற்பட்டது. இத்துறையின் வளர்ச்சி தேயிலைப் பதனிடல் கைத்தொழிலின் கூட்டப்பட்ட பெறுமதியில் எதிர்க்கணிய வளர்ச்சி இல்லாதிருப்பின் இன்னும் கூடுதலாக இருந்திருக்கும். தயாரிப்புத் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி உண்மை நியதிகளில் 13 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்த

தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறையின் மூலமாக ஏற்பட்டதாகும். சிறு கைத்தொழில்கள் துணைத்துறை 8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டடவாக்கத்துறை 1991 இன் கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதியின் 3.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1992 இல் 7.0 சதவீதத்தால் அதிகரித்ததுடன் ஓர் உன்னத நிலையை அடைந்தது. அரசதுறைக் கட்டடவாக்கம் வேகம் குறைந்த போதிலும் வதிவிட மற்றும் வதிவற்ற கட்டடவாக்கத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் காரணமாக இத்தேக்கநிலை தனியார்துறையினால் மிகக் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டது.

ஒன்று சேர்ந்த பணிகள்துறை 1992 இல் அதன் விரிவாக்கத்தைப் பேணியது. இது 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டதுடன் 1991 இல் பெற்ற 6.2 சதவீதத்தைவிடச் சற்றுக் குறைவாகக் காணப்பட்டது. இம்மெதுவான போக்கு முதன்மைத்துறைகளில் அதாவது வேளாண்மை மற்றும் அகழ்தலும் கல்லுடைத்தலும் என்பனவற்றில் ஏற்பட்ட சுருக்கத்தால் ஏற்பட்டதாகும். பணித்துறையினுள் போக்குவரத்து, தொடர்பூட்டல், வர்த்தகம் மற்றும் வங்கித்தொழிலும் நிதியியல் பணிகளும் என்பன கூடிய வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருந்தன. 1992 இல் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் பணிகள் துறை 6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறையும் முக்கியமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக 5.8 சதவீதம் கொண்ட பொதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இத்துறையின் விரிவாக்கம் 1992 இன் உண்மை மொ.தே.உ, இன் மொத்த அதிகரிப்பில் 28 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. தயாரிப்பு மற்றும் வர்த்தகத்தில் ஏற்பட்ட எழுச்சியடைந்த விரிவாக்கத்தால் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் துறை தொடர்ந்து விரிவடைந்து முன்னைய ஆண்டின் 4.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் உண்மை நியதிகளில் 6.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

நாட்டில் அதிகரித்த உறுதிப்பாடு மற்றும் சிறந்த பாதுகாப்பு என்பன காரணமாகச் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்ந்து விரிவடைந்தது. 1992 இல் சுற்றுலா வருகைகள் 23.9 சதவீதத்தால் அதிகரித்து வருகைகளின் மொத்த எண்ணிக்கை 1982 இல் அடைந்த சாதனை மிக்க எண் தொகையை அண்மியது. சுற்றுலாவிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 1991 இன் சிஎஉ 1,160 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 1,400 இலட்சத்திற்கு அதிகரித்து 20.6 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தன. சுற்றுலாக் கைத்தொழிலில் ஏற்பட்ட விரிவாக்கம் 1992 இல் ஏனைய பணிகள் துறை 6.7 சதவீதங் கொண்ட வளர்ச்சி வீதத்தை அடைவதற்கு உதவியது.

## செலவு

1992 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு (மொ.உ.செ.) ரூ. 459 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 1991 இற்காக மதிப்பிடப்பட்ட ரூ. 410 பில்லியன் பெறுமதியைவிட 11.9 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. நடைமுறை நியதிகளில் நுகர்வுச் செலவு 1991 இன் ரூ. 325 பில்லியனிலிருந்து 1992 இல் மதிப்பிடப்பட்ட ரூ. 359 பில்லியனுக்கு 10.3 சதவீதத்தால் அகதிரித்தது. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ரூ. 101 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது முன்னைய ஆண்டைவிட 18.0 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

தனியார் நுகர்வு மற்றும் அரச நுகர்வு என்பவற்றை உள்ளடக்கிய நுகர்வுச் செலவு 1991 இனை விடச் சிறிதளவிலான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் இக்குறைப்பு அரச நுகர்வில் கூடியளவில் காணப்பட்டது. 1991 இல் தனியார் நுகர்வுச் செலவு ரூ. 319 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருக்கையில் 1991 இல் இப்பெறுமதி ரூ. 288 பில்லியனாக விளங்கியது. தனியார் நுகர்வுச் செலவின் வளர்ச்சியில் ஏற்பட்ட வேகக் குறைவு இறக்குமதிப் பொருட்கள் மீதான சிறப்பாக நீடித்துழைக்கும் நுகர்வோர் பாவனைப் பொருட்கள் மீதான செலவில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியினால் ஏற்பட்டது. 1991 இல் 29.7 சதவீதத்தால் அதிகரித்த இறக்குமதிப் பொருட்களின் தனியார் நுகர்வு 1992 இல் 9.8 சத வீதத்தால் மட்டுமே அதிகரித்தது. இதற்கு மாறாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் நுகர்வு 1992 இல் ரூ. 2,280 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் இது 1991 இன் 13.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10.8 சதவீதங் கொண்ட வீதத்தில் வளர்ச்சி அடைந்தது. இதேவேளை அரச நுகர்வுச் செலவு 1992 இல் 8.8 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்த வேளையில் இவ்வதிகரிப்பு 1991 இல் 17.4 சதவீதமாக விளங்கியது.

இருப்புக்களின் மாற்றங்களை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன வாக்கம் (மொ.உ.மூ.ஆ.) 1992 இல் ரூ. 101 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது 1991 இற்கான மதிப்பிடப்பட்ட பெறுமதியைவிட 18.0 சதவீதம் அதிகமானதாகும். சந்தை விலைகளில் மொ.உ.உ. இற்கு மொ.உ.மூ. ஆக்கத்தின் விகிதம் 1991 இன் 22.9 சதவீதத்திலிருந்து 1992 இல் 23.7 சதவீதத்திற்கு அதிகரித்து முதலீட்டாளர் நம்பிக்கை அதிகரித்தமையையும் மேம்பட்ட உள்ளார்ந்த வளர்ச்சியையும் எடுத்துக் காட்டியது.

தனியார்துறை தொடர்ந்தும் முதலீட்டிற்கான முக்கிய பங்களிப்பாளராக விளங்கியது. 1992 இல் தனியார்துறை முதலீடுகள் 21.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன் இது 1991 இன் வளர்ச்சி வீதமான 17.8 சதவீதத்தைவிட ஓரளவு கூடியதாகும். தனியார் முதலீடுகள் வதிவு மற்றும் வதிவல்லா இரண்டையும் சார்ந்த கட்டடவாக்கம், போக்குவரத்துக் கருவி ஏனைய மூலதனப் பொருட்கள் ஆகிய துறைசளில் முக்கியமாக மேற்கொள்ளப்பட்டன. அரசதுறை முதலீடு 1991 இன் 25.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 1.9 சத வீதத்தால் விரிவடைந்தது. அரச முதலீடு பொருளாதாரத்தின் விரிவாக்கத்திற்கு அத்தியாவசியமான வீதி அபிவிருத்தி மற்றும் தொலைத் தொடர்புகள் போன்ற உள்ளார்ந்த அமைப்புக்களின் முக்கிய பகுதிகள் மீது கவனஞ் செலுத்துவதற்கு உதவியது.

வெளிநாட்டு நேரடி முதலீடு 1992 இல் தொடர்ந்தும் அதிகரித்தது. முதலீட்டுச் சபையின் கீழான வாணிப முயற்சிகள் மற்றும் தனியார் மயமாக்கப் பட்ட தொழில் முயற்சிகளின் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு 1991 இன் சிஎஉ 460 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 850 இலட்சத்திற்கு 84 சத வீதத்தால் அதிகரித்தது.

**மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்**

1992 இல் பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 596 பில்லியனுக்கு 15.3 சதவீதத்தால் அதிகரித்தன. ரூ. 79 பில்லியனைக் கொண்ட பொதுவான அதிகரிப்பு மொ.உ.உ. இலான ரூ. 51

அட்டவணை 1.7

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1982—1992

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) | | | | 1982 விலைகளில் | | | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1990* | 1991* | 1992* | 1982 | | 1990* | | 1991* | | 1992* | | 1990 இற்கு மேலாக 1991 | 1991 இற்கு மேலாக 1992 |
| | | | | | தொகை ப.இ. ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 145,143 | 444,264 | 517,270 | 596,313 | 145,143 | 100 | 188,904 | 100 | 202,439 | 100 | 214,534 | 100 | 7.2 | 6.0 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 99,238 | 321,783 | 372,596 | 423,289 | 99,238 | 68 | 135,655 | 72 | 141,895 | 70 | 147,996 | 69 | 4.6 | 4.3 |
| 1.2. பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் ... | 45,905 | 122,481 | 144,674 | 173,024 | 45,905 | 32 | 53,249 | 28 | 60,544 | 30 | 66,538 | 31 | 13.7 | 9.9 |
| 2. பயன்பாடு ... | 145,143 | 444,264 | 517,270 | 596,313 | 145,143 | 100 | 188,904 | 100 | 202,439 | 100 | 214,534 | 100 | 7.2 | 6.0 |
| 2.1. நுகர்வு ... | 87,468 | 275,692 | 325,098 | 358,639 | 87,468 | 60 | 116,428 | 62 | 124,205 | 61 | 127,260 | 59 | 6.7 | 2.5 |
| 2.2. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 30,279 | 70,417 | 84,206 | 99,507 | 30,279 | 21 | 31,879 | 17 | 34,367 | 17 | 37,474 | 17 | 7.8 | 9.0 |
| 2.2.1. அரசு ... | 4,866 | 12,507 | 15,838 | 16,134 | 4,866 | 3 | 4,932 | 3 | 5,667 | 3 | 5,248 | 2 | 14.9 | — 7.4 |
| 2.2.2. அரசகூட்டுத்தாபனங்கள் }<br>2.2.3. தனியார்துறை } | 25,413 | 57,910 | 68,368 | 83,373 | 25,413 | 18 | 26,947 | 14 | 28,700 | 14 | 32,226 | 15 | 6.5 | 12.3 |
| 2.3. இருப்புக்களில் மாற்றம் ... | 248 | 1,038 | 950 | 1,000 | 248 | — | 240 | — | 201 | — | 195 | — | —16.3 | — 3.0 |
| 2.4. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 27,148 | 97,117 | 107,016 | 137,167 | 27,148 | 19 | 40,357 | 21 | 43,666 | 22 | 49,605 | 23 | 8.2 | 13.6 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: 1992 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் கிடைக்கத்தக்க சுங்கத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

பில்லியன் அதிகரிப்பினதும் பொருட்கள் மற்றும் காரணியல்லா பணிகளின் இறக்குமதிகளிலான ரூ. 28 பில்லியன் அதிகரிப்பினதும் விளைவால் ஏற்பட்ட தாகும். பொருட்கள் மற்றும் காரணியல்லா பணிகளின் மொத்த இறக்குமதிகள் 1991 இன் 18.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 19.6 சத வீதத்தால் அதிகரித்தன.

பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த மூலவளங்களில் 60 சதவீதம் நுகர்வுக்காகவும், 17 சதவீதம் முதலீட்டிற்காகவும் பயன்படுத்தப் பட்டதுடன் எஞ்சிய 23 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1992 இல் ஏற்றுமதிகள், 1991 இன் 10.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 28.2 சதவீதத்தால் அதிகரித்தன. 1992 இல் ஏற்றுமதிகளின் வளர்ச்சி வீதம் இறக்குமதி களின் வளர்ச்சி வீதத்தைவிடக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து விளங்கியது. 1991 இல் இது எதிர்மாறாக இருந்தது. கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் உண்மை நியதிகளில் 1991 இன் 7.2 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 6.0 சத வீதத்தால் அதிகரித்தது.

**அட்டவணை 1.8**

**நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புகள்**

(ப இ. ரூபாய்களில்)

| வகை | 1982 | 1990* | 1991* | 1992* |
|---|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | 99,238 | 321,783 | 372,594 | 423,290 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் | 11,770 | 46,091 | 47,498 | 64,650 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | — 1,959 | — 6,685 | — 7,367 | — 7,694 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 5,494 | 14,518 | 16,623 | 20,369 |
| 5. தேசிய சேமிப்புகள் | 15,305 | 53,924 | 57,754 | 77,325 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 2) | 11.9 | 14.3 | 12.7 | 15.3 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 5) — | 15.4 | 16.8 | 15.2 | 18.3 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: 1992 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் கிடைக்கத்தக்க சுங்கத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

1992 இல் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் உண்மை நியதிகளில் 9.0 சதவீதத்தால் அதிகரித்தது. மூலதனவாக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சி விரி வடைந்த கட்டிடவாக்க நடவடிக்கையாலும் போக்குவரத்தில் அதிகரித்த உண்மை முதலீட்டாலும் ஏற்பட்டதாகும். 1992 இல் மொத்த நுகர்வு 1991 ஐக் காட்டிலும் குறைவான உண்மை வீதத்தில் அதிகரித்தது. வேளாண்மையில் ஏற்பட்ட சுருக்கம் வேளாண்மை வருவாயைக் குறைத்ததுடன் இது நுகர்வுச் செலவின் அதிகரிப்பில் ஏற்பட்ட மெதுவான போக்கிலும் பிரதிபலித்தது.